

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, முஞ்சிறை அரசு உயர்நிலைப்பள்ளிக்கு இன்று (26.08.2016) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

செ.வெ.எண்: 568 /2016 நாள்: 26.08.2016

**அதிக மதிப்பெண்கள் பெற்றால் வாழ்வில் உயர்ந்த நிலை அடையமுடியும்.**
**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள்,**
**முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பள்ளிக்கு நேரில் சென்று,**
**பார்வையிட்டு ஆய்வு செய்து,**
**மாணவ, மாணவியர்களுக்கு அறிவுரை.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, முஞ்சிறை அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் உதச்சிக்கோட்டை அரசு நடுநிலைப்பள்ளிக்கு இன்று (26.08.2016) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

அதனை தொடர்ந்து 10 மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவர்களின் வகுப்பறைக்கு சென்று, மாணவர்களின் கற்கும் திறன், வருகை பதிவேடு ஆகியவற்றை ஆய்வு செய்தார். பின்னர் குறைந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள், பாடங்களில் ஏதேனும் சந்தேகம் இருந்தால் அதனை ஆசிரியர்கள் அல்லது தங்களது நண்பர்களிடம் கேட்டு, தெரிந்துகொள்ள வேண்டும் எனவும், இதற்கு முன்பாக நடைபெற்ற தேர்வுகளின் வினாத்தாள்கள் வைத்து, படித்து கொள்வதோடு, வீட்டில் இருந்தபடியே தேர்வுகள் நீங்களாகவே எழுதி, பிழைகளை திருத்திக்கொள்ள வேண்டும் எனவும், பாடத்தின் கடினமான தலைப்புக்கு அதிக கவனம் செலுத்தி, புரிந்துகொண்டு, எழுதி பார்க்க வேண்டும் எனவும், வருங்காலங்களில் உயர்ந்த நிலையை அடைய இப்போதிருந்தே மாணவர்கள் கடினமாக உழைக்க வேண்டும் என தெரிவித்தார்.

பின்னர் உதச்சிக்கோட்டை அரசு நடுநிலைப்பள்ளியில் தயாரிக்கப்படும் மதிய உணவு மற்றும் சமையலறைக்கு திடீர் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது குழித்துறை மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் (பொ) திரு. மோகனன், தலைமையாசிரியர்கள் திருமதி. லேன் ஸ்லேட்பாய், திருமதி. உதய ஜோதி, முஞ்சிறை ஊராட்சித்தலைவர் திரு. கே.வி. சந்திரசேகர் ஆகியோர் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.